(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 143.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2026 ஏப்ரல் 09, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1187/2025

கௌரவ சிவஞானம் சிறீதரன்,— பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் பாதுகாப்புத் திணைக்களம் கிளிநொச்சி மாவட்டத்தில் முன்பள்ளிகளை நடத்துகிறது என்பதையும், அத்தகைய முன்பள்ளிகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் சம்பளம் வழங்கப்படுவதையும் அவர் அறிவாரா;

(ii) அந்த மாவட்டத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் செயற்படுத்தப்படும் முன்பள்ளிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி முன்பள்ளிகளில் கடமையாற்றுகின்ற, சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் சம்பளம் வழங்கப்படுகின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்த மொத்தச் சம்பளம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி முன்பள்ளி மாணவர்களின் சீருடைகளுக்காக பெற்றோரிடமிருந்து பணம் அறவிடப்படுவதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், ஒரு பிள்ளைக்கான அறவீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அத்தொகை அறவிடப்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) அத்தகைய சீருடைகளில் இராணுவச் சின்னம் பொறிக்கப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி முன்பள்ளிகள் மாகாண சபையின் கீழ் இயங்குவதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தால் இந்த முன்பள்ளிகள் வழிநடத்தப்படுவதன் சட்டப் பின்னணி யாதென்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2.

1408/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வன்னித் தேர்தல் மாவட்டத்திற்குரிய வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய நிருவாக மாவட்டங்களில் தமது சொந்தக் காணிகளில் வசிக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களில், அரசாங்கத்திடம் இருந்து சட்டரீதியான காணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்டுள்ள மற்றும் காணி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளாத குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி மாவட்டங்களில் வசிக்கும் மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப் படுத்துவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திகதி யாதென்பதையும்;

(v) கடந்த அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட ‘உருமய’ வேலைத்திட்டம் மீளவும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1473/2025

கௌரவ கே.காதர் மஸ்தான்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் பிரதான வீதியிலுள்ள மேற்கு தாராபுரம் கிராம அலுவலர் பிரிவில், பூர்த்தி செய்யப்படாத நிலையில் கைவிடப்பட்டிருக்கும் கூட்டுறவு கிராம கருத்திட்டத்திற்குரிய இரண்டு கட்டிடங்கள் உள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி நிர்மாணப் பணிகளுக்கு, மன்னார் பிரதேச சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இக்கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டமைக்கான நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) இக்கருத்திட்டத்திற்கான சாத்தியவள அறிக்கை உட்பட அனைத்து அனுமதிப் பத்திரங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டம் சம்பந்தமாக ஏதேனும் விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனின், அவ்வறிக்கையை சமர்ப்பிக்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிப்படுத்தல் உறுதியின் மூலம், வரையறுக்கப்பட்ட இலங்கை முயற்சியாண்மை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் சட்டவிரோதமான முறையில் உரித்தைப் பெற்றுக்கொண்ட காணியிலேயே இக்கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக மாத்திரம் நிறுவப்பட்டு, குறிப்பிட்ட அமைச்சில் பதிவு செய்யப்பட்டு, தற்போது செயற்படாத நிலையில் காணப்படுகின்ற இச்சங்கத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி, பதிவு செய்யப்பட்ட திகதி, பதிவிலக்கம் போன்றவற்றின் விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) இச்சங்கத்தின் யாப்பின் பிரதியொன்றை அமைச்சர் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) சங்கத்தின் தலைவர் மற்றும் ஏனைய அங்கத்தவர்களின் பெயர்கள், தனிப்பட்ட முகவரிகள் உள்ளிட்ட விபரங்கள் யாவை என்பதையும்;

(v) இச்சங்கத்தின் ஊடாக இற்றைவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

1503/2025

கௌரவ பீ. ஆரியவங்ஷ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை இலங்கையில் மிளகுச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலப்பரப்பு மற்றும் மிளகு உற்பத்தி என்பன ஒவ்வொரு ஆண்டு வாரியாகவும், மாவட்ட ரீதியாகவும் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காலப்பகுதியில் மிளகு ஏற்றுமதி மூலம் ஈட்டிய வருமானம் ஆண்டு வாரியாக வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மிளகுச் செய்கையாளர்களை மேலும் ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

1545/2025

கௌரவ (கலாநிதி) நந்தன மில்லகல,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பெருந்தோட்ட மக்கள் வாழும் காணிகளுக்கான முழு உரிமையுள்ள காணி உறுதிப்பத்திரங்கள் கிடைக்கப் பெறாமையால், பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அவர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாவதை அறிவாரா;

(ii) ஆமெனில், இது தொடர்பில் இன்றளவில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) இன்றேல், இது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

6.

1640/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலை மாவட்டத்திற்குரிய பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தோப்பூர் உப பிரதேச செயலகம் தரமுயர்த்தப்படவில்லை என்பதையும், அதன் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்படும் அசௌகரிகங்கள் பற்றியும் அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி உப பிரதேச செயலகமானது பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) குறித்த உப பிரதேச செயலகத்தை எதிர்காலத்தில் பிரதேச செயலகமாக தரமுயர்த்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1673/2025

கௌரவ எம்.எஸ். அப்துல் வாசித்,— கமத்தொழில், கால்நடை வளங்கள் காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட சின்ன உல்லை, அறுகம்பே, சர்வோதயபுரம், ஜலால்தீன் சதுக்கம், குடாக்கள்ளி, விஸ்கி பொயிண்ட், கொட்டுக்கல் மற்றும் லைட் ஹவுஸ் போன்ற சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா விடுதிகளை நடத்துபவர்களின் காணிகளுக்கு அரசாங்கம் சரியான முறையில் நில அளவீடுகளை செய்து உறுதிகளை வழங்கவில்லை என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அத்தகைய ஆவணங்கள் இல்லாத சுற்றுலா விடுதிகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்ய முடியாது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) அதன் காரணமாக, பொத்துவில் பிரதேச சபைக்கு ஏற்புடைய வியாபார வரிகளை அறவிட முடியாமல் உள்ளது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) அவ்வாறெனில், பிரதேச செயலாளரின் அனுமதியின் கீழ் தனியார் நில அளவையாளர்கள் மூலம் நில அளவை செய்து 'உருமய' உறுதிகளை விரைவாகப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்க முடியுமா என்பதையும்;

(v) அவ்வாறு நில அளவையாளர்களால் தயாரிக்கப்படும் வரைபடத்தைப் பயன்படுத்தி அந்தக் காணிகளை 'உருமய' திட்டத்தில் சேர்க்க முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1853/2026

கௌரவ ரொஷான் அக்மீமன,— துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திருகோணமலைத் துறைமுகம் கடந்த 15 ஆண்டு காலப்பகுதியில் ஈட்டியுள்ள செயற்பாட்டு இலாபம் அல்லது நட்டம் ஒவ்வொரு ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி துறைமுகத்திற்குச் சொந்தமாகவிருந்த இறங்குதுறைகள் அல்லது முனையங்கள் பின்னர் பல்வேறு தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நிறுவனங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி நிறுவனங்கள் துறைமுக அதிகார சபைக்குச் செலுத்த வேண்டிய குத்தகைப் பணம் அல்லது ஏனைய கொடுப்பனவுகளைச் சரியான முறையில் செலுத்தியுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், கடந்த 20 ஆண்டு காலப்பகுதிக்குரிய மேற்படி கொடுப்பனவுகள் தொடர்பான விபரங்கள் யாவையென்பதையும்;

(vi) தற்போது திருகோணமலைத் துறைமுகத்தினுள் அரசாங்கத்திற்கு முழுமையான, ஓரளவு அல்லது பகுதியளவிலான உரித்தினைக் கொண்டுள்ள இறங்குதுறைகள் அல்லது முனையங்கள் உள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

(viii) திருகோணமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக காணப்படும் திட்டங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9.

1861/2026

கௌரவ ருவன் விஜேவீர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டில் பாடசாலை விளையாட்டுப் பயிற்றுநர்களாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆட்சேர்ப்பு சார்ந்த அடிப்படைத் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) பாடசாலை விளையாட்டுப் பயிற்றுநர்களாக இவர்களிடமிருந்து எதிர்ப்பார்க்கப்படும் பணிப்பொறுப்பு யாதென்பதையும்;

(iv) இற்றைவரை மேற்படி பதவியில் கடமையாற்றும் நபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

10.

1905/2026

கௌரவ ஆர். ஜீ. விஜேரத்ன,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹங்குரன்கெத வாடிவீடு அமைச்சின் விடயப்பரப்பிற்கு உட்பட்டது என்பதையும்;

(ii) அங்கு சட்டவிரோதச் செயல்கள் இடம்பெறுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி வாடிவீட்டை நடத்திச் செல்பவரின் பெயர் யாதென்பதையும்;

(ii) அவருக்கு மேற்படி வாடிவீடு ஒப்படைக்கப்பட்டுள்ள அடிப்படை யாதென்பதையும்;

(iii) அவர் மேற்படி வாடிவீட்டை நடத்திச் செல்லும் காலம் யாதென்பதையும்;

(iv) அரசாங்க வாடிவீடுகளிலிருந்து பயனுறுதிமிக்க சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்காலத்தில் எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் (திருத்தம்),— 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாய (திருத்தம்),— 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 4 ஆம் மற்றும் 5 ஆம் இலக்கப் பிரேரணைகள் மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27 இன் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப் பெறுமாக.

4.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பாராக.

5.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— கொழும்பு துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்களை கட்டாய பௌதீகப் பரிசோதனைக்கு உட்படுத்தாமல் விடுவித்தமை தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கையிடுவதற்காகவும், அது குறித்த அதன் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்காகவுமான பாராளுமன்ற விசேட குழு,— கொழும்பு துறைமுகத்திலிருந்து 323 கொள்கலன்களை கட்டாய பௌதீகப் பரிசோதனைக்கு உட்படுத்தாமல் விடுவித்தமை தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கையிடுவதற்காகவும், அது குறித்த அதன் முன்மொழிவுகளையும் விதப்புரைகளையும் சமர்ப்பிப்பதற்காகவுமான பாராளுமன்ற விசேட குழுவானது தன்னால் அவதானிக்கப்பட்ட விடயங்களை, 2025 நவம்பர் 19 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட பிரேரணை மூலமாக பணிக்கப்பட்ட கால எல்லைக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மேலும் காலம் தேவைப்படுவதால் குறிப்பிட்ட விசேடகுழுவிற்கு வழங்கப்பட்ட கால எல்லை, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 102 இன் பிரகாரம் 2026 யூலை 21 ஆம் திகதி வரை கால நீடிப்பு செய்யப்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— தரைப்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (357 ஆம் அத்தியாயமான) தரைப்படைச் சட்டத்தின் 29 ஆம் மற்றும் 155 ஆம் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— கடற்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (358 ஆம் அத்தியாயமான) கடற்படைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— வான்படைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (359 ஆம் அத்தியாயமான) வான்படைச் சட்டத்தின் 29 ஆம் மற்றும் 155 ஆம் பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2025 பெப்புருவரி 15 ஆம் திகதிய 2423/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.03.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியவர்களால், மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பிரிவின் ஏற்பாடுகள், 2026 மார்ச் 28 ஆம் திகதியிலிருந்து இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவிற்கமைய சனாதிபதி அவர்களுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், 2026 மார்ச்சு 28 ஆம் திகதிய 2481/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் மற்றும் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டதும் 2026.04.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*6.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

மீட்பு, புனர்வாழ்வு மற்றும் கடனிறுக்கவகையின்மை (கூட்டிணைப்பு மற்றும் தனிப்பட்ட) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

மத்தியஸ்தம் (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

வாடகை (நீக்கல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 செப்தெம்பர் 24) [1].

*12.

பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2025 ஏப்ரல் 10 ),— "2025 மார்ச் 14 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டலந்த வீடமைப்புத் திட்டத்தில் உள்ள சித்திரவதைக்கூடங்கள், சட்டரீதியற்ற தடுப்பு நிலையங்களை நிறுவுதல், பராமரித்தல் ஆகியவற்றை விசாரணை செய்த ஆணைக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தினால் பரிசீலனை செய்யப்படுமாக." எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

13.

மாகாண சபைத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

14.

நிகழ்நிலைக் காப்புச்சட்டம் (இரத்துச் செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---